**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.20** **நாள் : 25.01.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் பதிவு செய்யப்பட்ட சாலையோர வியாபாரிகள் புதிய அடையாள அட்டை பெறுவதற்கான இறுதிகட்டமாக அந்தந்த மண்டலத்திற்குட்பட்ட வார்டு அலுவலகங்களில் 27.01.2025 முதல் 15.02.2025 வரை வழங்கப்படவுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் சாலையோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் விற்பனையை ஒழுங்குமுறைப்படுத்துதல், சட்டம் மற்றும் விதிகளை பின்பற்றி நகர விற்பனைக் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பதிவு செய்யப்பட்ட 35,588 சாலையோர வியாபாரிகளின் விற்பனையை ஒழுங்குபடுத்துவதற்காக Chip பொருத்திய QR Code மற்றும் இணைய இணைப்பு (Weblink) பயன்பாட்டுடன் கூடிய புதிய அடையாள அட்டை வழங்குவதற்காக 22.11.2024 முதல் 31.12.2024 வரை அனைத்து மண்டல அலுவலகங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, அந்தந்த மண்டலங்களிலும் வியாபாரிகளுக்கான அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது. 23.01.2025 வரை 18,398 சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

நகர விற்பனைக் குழுவின் 24.01.2025 அன்று நடைபெற்ற 9வது கூட்டத்தில் சாலையோர வியாபாரிகளுக்கான மீதமுள்ள அடையாள அட்டைகளை பெறுவதற்கு இறுதி வாய்ப்பாக மீண்டும் 27.01.2025 முதல் 15.02.2025 வரை அந்தந்த மண்டலத்திற்குட்பட்ட வார்டு அலுவலகங்களில் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

சாலையோர வியாபாரிகளின் அடையாள அட்டையில் திருத்தம் செய்ய வேண்டி ஏற்கனவே விண்ணப்பம் செய்தவர்களுக்கான அடையாள அட்டைகள் அச்சிடப்பட்ட பின்னர் வழங்கப்படும்.

மேலும், 15.02.2025க்குள் பெற்றுக் கொள்ளாத சாலையோர வியாபாரிகளின் அடையாள அட்டைகள் ரத்து செய்யப்படும். எனவே, இந்த இறுதி வாய்ப்பினை சாலையோர வியாபாரிகள் பயன்படுத்தி பழைய அடையாள அட்டைகளை ஒப்படைத்து புதிய அடையாள அட்டைகள் அந்தந்த வார்டுகளில் அலுவலக வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**